1989 மே 12] [திரு. சோ. அழகர்சாமி]

அந்தத் தொழிலாளர்களுக்கு முதலாவதாக சொன்னபடி, ஒரு மாத ஊதியத்தை முன்கூட்டியே கொடுப்பதற்காகவும் ஏற்பாடுகளைச் செய்வதற்கும் அரசு முன்வரவேண்டும் என்று கேட்டு, இப் பிரச்சினையை மாண்புமிகு முதலமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. அழகர்சாமி அவர்கள் இங்கு குறிப்பிட்ட இந்தப் பிரச்சினை குறித்து, ஸ்டாண்டர்டு மோட்டார்ஸ் பிரச்சினை குறித்து, நம்முடைய தொழிலாளர் அமைச்சர் அவர்கள் பலமுறை நிர்வாகத்தின் உறுப்பினர்களோடும், தொழிற்சங்கப் பிரதிநிதிகளோடும் பேசி இருக்கிறார்கள். ஒரு மாதச் சம்பளத்தைத் தருவது என்று உடன்பாடு ஏற்பட்ட போது, நிர்வாகத்தினர் அந்தச் சம்பளத்தைத் தருவதற்காக சென்றபோது, தாக்கப்பட்டதாக ஒரு காரணத்தைக் கூறி, அதனால் மீண்டும் உடன்பாட்டுக்கு வர இயலாது என்று ஒரு சமாதானம் சொன்னதாக எனக்குத் தகவல் கிடைத்தது. இருந்தாலும்கூட, யாரோ ஒரு சிலர் செய்த காரியத்திற்கு ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் பாதிக்கப்படுகிற நிலைமையை நாம் ஏற்றுக் கொள்வதற்கு இயலாது. எனவே இந்தப் பிரச்சினையிலே ஒரு சுமூகமான தீர்வுகாண தொடர்ந்து நம்முடைய தொழிலாளர் நலத்துறை அமைச்சர் ஈடுபட்டு வருகின்றார். சட்டமன்றக் கூட்டத் தொடரும், பல்வேறு அலுவல்களும் இருந்த காரணத்தால் நான் நேரிடையாக அதிலே ஈடுபட இயலவில்லை. நான் தொழிலாளர் அமைச்சரிடத்திலே இது பற்றிய விவரங்களைக் கேட்டு கூட்டத் தொடர் முடிந்தவுடன் இந்தப் பிரச்சினையிலே தீவிர கவனம் செலுத்தி, தொழிலாளர் நலனுக்காக நிச்சயமாக ஒரு நல்ல முடிவை இந்த அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(இ) சாத்தூர் கூட்டுறவுப் பயிற்சிப் பள்ளியை மூடும் செயற்குறிப்பு குறித்து.

திரு. வே. தங்கபாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காமராசர் மாவட்டத்தில் சாத்தூர் நகரத்தில் 1986ஆம் ஆண்டு முதல் கூட்டுறவு பயிற்சிப் பள்ளி தொடங்கப்பட்டு மிகச் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டு வருகிறது. அரசாங்கம் இந்தக் கூட்டுறவு பயிற்சிப் பள்ளிக்கு இடங்களை வாங்கச் சொல்லி 2 ஏக்கர் நிலம் வாங்கப்பட்டு ஒரு கோடி ரூபாயிலே மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு பள்ளிக் கட்டிடங்களும் உணவு விடுதியும் அங்கே தயாராக இருப்பதாக தகவல் வந்திருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் அரசின் சார்பாக ஆணை பிறப்பிக்கப்பட்டு அந்தப் பயிற்சிப் பள்ளியை மூட வேண்டுமென்று உத்திரவு பதிவாளரிடமிருந்து சாத்தூர் துணைப் பதிவாளருக்கு சென்று இருப்பதாக தகவல் வந்திருக்கிறது. இது போன்ற துவக்க நிலையில்

சிறப்பாகப் பணியாற்றுகின்ற அந்தப் பயிற்சிப் பள்ளியை—தென் மாவட்டங்களில் மிக முக்கியமாக இருக்கிற காரணத்தால், அந்தப் பயிற்சிப் பள்ளியைத் தொடர்ந்து நடத்துவதற்கு அரசு உத்திரவிட வேண்டுமென்று மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களைத் தங்கள் மூலமாக வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல பதிவாளரின் கடிதத்தில் சாத்தூர் கூட்டுறவு பயிற்சி நிலையத்திற்கு அரசு அனுமதித்துள்ள இலவசப் பள்ளி இடங்களை 15-5-1989 வரை பயன்படுத்தலாம் என்றும், 16-5-1989 வரை இப்பயிற்சி நிலையத்திற்கு பணி இடங்கள் மற்றும் நிறுவனத்தில் பணிபுரியும் பணி இடங்களையும் கலைக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. இப்போது கூட்டுறவு பயிற்சி நிலையத்தை தொடர்ந்து நடத்த பதிவாளரின் அனுமதி வேண்டி, தனியாக ஒரு கோரிக்கையை கூட்டுறவுச் சங்கங்களுடைய இணைப் பதிவாளர் (காமராசர் மண்டலம்) அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அதற்கு இடையில் நிர்வாகக் காரணங்களுக்காக இப்பயிற்சி நிலையத்தை 30-6-1989 வரை தொடர கால அவகாசம் அளிக்க பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன் என்றும் எழுதியிருக்கிறார். எனவே கூட்டுறவுச் சங்கங்களுடைய இணைப் பதிவாளருடைய பரிந்துரையை—30-6-1989 வரை கேட்டிருக்கக்கூடியதை இந்த அரசாங்கம் ஏற்றுக் கொண்டிருக்கிறது. தொடர்ந்து இந்தம் பயிற்சி நிலையப் அங்கே இருக்க வேண்டும் என்பதைப் பற்றி அரசாங்கம் பரிசீலிக்கும்.

(ஈ) ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மத்திய அரசு, மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு நேரடியாக நிதி ஒதுக்கீடு செய்வது குறித்து.

திரு. எம். அப்துல் லத்தீப்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று நான் எழுப்ப விரும்புகிற பிரச்சினை நேற்றையதினம் கூட இந்த அவையிலே ஓரளவுக்கு விரிவாக விவாதிக்கப்பட்டு இருக்கிறது. ஆனால் நம்முடைய அரசாங்கத்தினுடைய கொள்கை என்ன, அணுகுமுறை என்ன, முடிவு என்ன என்பதை இதுவரையில் எங்களால் தீர்க்கமாக, தீர்மானமாக அறிந்து கொள்ள முடியவில்லை என்ற காரணத்தால் நான் இந்தப் பிரச்சினையை மாண்புமிகு முதலமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

பஞ்சாயத்து ராஜ் என்ற அந்தப் புதிய திட்டத்தின் அடிப்படையில் நம்முடைய அரசமைப்புச் சட்டத்தில் இன்றைக்கு